பொது சிவில் சட்ட அமலாக்க முயற்சியைக் கைவிட வேண்டும்

சட்ட ஆணையத் தலைவருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்

சென்னை, ஜூலை 13: பொது சிவில் சட்டத்தை அமல்படுத்தும் முயற்சியைக் கைவிட வேண்டும் என்று இந்திய சட்ட ஆணையத் தலைவர் ரிதுராஜ் அவஸ்திக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

இது குறித்து அவர் வியாழக்கிழமை எழுதியுள்ள கடிதம்:

பன்முகச் சமூகக் கட்டமைப்புக்கு பெயர்பெற்ற இந்தியாவில் பொது சிவில் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான முன்னெடுப்பு நடவடிக்கைகளுக்கு தமிழக அரசு தனது வலுவான எதிர்ப்பை வெளிப்படுத்தவே இந்தக் கடிதம் எழுதப்படுகிறது.

மதச்சார்பின்மை: மதச்சார்பின்மை என்பது அரசியலமைப்பின் அடிப்படைக் கட்டமைப்பின் முக்கியப் பகுதியாகும். ஒரு மதத்தைப் பின்பற்றும் மக்களின் மத பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும் இடத்துக்கு இடம் வேறுபடும். அவர்களின் ஒருமித்த கருத்து பெறாமல் பொது சிவில் சட்டத்துக்கு ஒப்புதல் சாத்தியமில்லை.

கடந்த 2018-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 31-ஆம் தேதியிட்ட அறிக்கையை விவாதிப்பதற்காக இந்தியாவின் 21-ஆவது சட்ட ஆணையக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது. அப்போது, பொது சிவில் சட்டம் விரும்பத்தக்கது அல்ல எனத் தெரிவிக்கப்பட்டது.

அவசர கதியில் பொது சிவில் சட்டத்தை அறிமுகப்படுத்துவது அரசியலமைப்புச் சட்ட நெறிமுறைகளுக்கு முரணாக அமைவதோடு மட்டுமல்லாமல், நாட்டில் வகுப்புவாத ஒற்றுமையின்மைக்கும், குழப்பத்துக்கும் வழிவகுக்கும்.

தனிநபர் சட்டங்கள் சிறுபான்மை சமூகங்களுக்கு சில பாதுகாப்பு மற்றும் உரிமைகளை வழங்குகின்றன. பொது சிவில் சட்டத்தைச் செயல்படுத்துவதற்கான எந்தவொரு முயற்சியும், பழங்குடியினர் உள்பட சிறுபான்மையினரின் தனித்துவமான மத, கலாசார அடையாளத்தை அழிக்கும்.

தனிப்பட்ட சட்டங்களை மதித்தல்: பொது சிவில் சட்டத்தைத் திணிக்க முயற்சிப்பதன் மூலம், பன்முகத்தன்மை மறுக்கப்படுவதோடு, நாட்டின் பன்முகத்தன்மையின் சாராம்சத்தைக் குறைத்து மதிப்பிடுவதற்கு வழிவகுக்கும். பழங்குடி சமூகங்கள் உள்பட பல்வேறு சமூகங்களின் தனித்துவமான மரபுகள், நடைமுறைகள் மற்றும் தனிப்பட்ட சட்டங்களை மதித்து பாதுகாப்பது முக்கியம்.

பொது சிவில் சட்டம் போன்ற ஒரு சட்டத்தைத் திணிக்கும் எந்தவொரு முயற்சியும், மத விவகாரங்களில் அரசின் அத்துமீறலாகக் கருதப்படும். பல்வேறு மத சமூகங்களுக்கு இடையே ஆழமான பிளவுகளையும், சமூக அமைதியின்மையையும் பொது சிவில் சட்டம் உருவாக்கும். பலவகையான மதம், பண்பாடு, மொழி வேறுபாடுகள் உள்ள நமது நாட்டில், மத நல்லிணக்கம் மிகவும் முக்கியமானது.

சமூக பொருளாதார தாக்கம்: சமூகத்தில் நிலவும் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைக் கருத்தில் கொள்ளாமல், ஒரே மாதிரியான சட்டத்தை அமல்படுத்துவது பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும். இதற்குப் பதிலாக, மதங்களுக்கு இடையே உரையாடல்களை வலுப்படுத்துவதிலும், சகிப்புத்தன்மையை ஊக்குவிப்பதிலும் இந்தியாவை வரையறுக்கும் வேற்றுமையில் ஒற்றுமை உணர்வை வளர்ப்பதிலும் கவனம் செலுத்த வேண்டும்.

இப்போதைய சூழலில், பொது சிவில் சட்டம் தொடர்பாக மாநில அரசுகள், மதத் தலைவர்கள், சமூகப் பிரதிநிதிகளுடன் விரிவான ஆலோசனைகள் மேற்கொள்ளப்படவில்லை. இந்த விஷயத்தில் அனைவராலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வை எட்டுவது முக்கியமானது. எனவே, பொது சிவில் சட்டத்தைக் கைவிட வேண்டும். ஒரே மாதிரியான தன்மையைக் கொண்டுவர முயற்சிப்பதைவிட, அனைத்து மக்களுக்கும் உரிமைகள், வாய்ப்புகளில் ஒரே மாதிரியான சூழலை ஏற்படுத்த வேண்டும். நமது பன்முகத் தன்மையை நிலைநிறுத்திக் கொண்டாட வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

எடப்பாடி பழனிசாமி மீதான புகாரை மீண்டும் விசாரிக்க அனுமதித்தது ஏன்?

உயர்நீதிமன்றத்தில் ஊழல் தடுப்புத் துறை விளக்கம்

சென்னை, ஜூலை 13: ஆரம்பகட்ட விசாரணை அறிக்கையை ஏற்கவும் நிராகரிக்கவும் ஊழல் கண்காணிப்பு ஆணையருக்கு அதிகாரம் உள்ளதால்தான் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமிக்கு எதிரான புகாரை மீண்டும் விசாரிக்க அனுமதி அளித்திருப்பதாக சென்னை உயர்நீதிமன்றத்தில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை தெரிவித்துள்ளது.

முந்தைய அதிமுக ஆட்சிக் காலத்தில் நெடுஞ்சாலைத் துறையில் ஒப்பந்தப் புள்ளி கோரியதில் ரூ. 4,800 கோடி அளவுக்கு முறைகேடு நடந்துள்ளதாகக் கூறி, முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமிக்கு எதிராக அளித்த புகார் மீது சிறப்புப் புலனாய்வுக் குழுவை அமைத்து விசாரிக்க உத்தரவிடக் கோரி திமுக அமைப்புச் செயலர் ஆர்.எஸ் பாரதி, சென்னை உயர்நீதிமன்றத்தில் 2018-ஆம் ஆண்டு வழக்கு தொடுத்தார்.

இந்த வழக்கை விசாரித்த உயர்நீதிமன்றம், நெடுஞ்சாலைத் துறை டெண்டர் முறைகேடு புகார் குறித்து சிபிஐ விசாரணை நடத்த 2018-ஆம் ஆண்டு உத்தரவிட்டிருந்தது.

இதை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்றத்தின் உத்தரவை ரத்து செய்து, வழக்கை மீண்டும் விசாரித்து முடிவெடுக்க சென்னை உயர்நீதிமன்றத்துக்கு உத்தரவிட்டது.

விசாரணை அதிகாரி இல்லை: அதன்படி, இந்த வழக்கு நீதிபதி என்.ஆனந்த் வெங்கடேஷ் முன் வியாழக்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது, எடப்பாடி பழனிசாமி தரப்பில் ஆஜரான மூத்த வழக்குரைஞர் ஆர்யமா சுந்தரம், 'ஏற்கெனவே தாக்கல் செய்யப்பட்ட ஆரம்பகட்ட விசாரணை அறிக்கை உள்ளிட்டவற்றைக் கருத்தில்கொண்டு, இந்த வழக்கை மீண்டும் விசாரிக்க வேண்டுமென உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஊழல் கண்காணிப்பு ஆணையர் என்பவர் விசாரணை அதிகாரி இல்லை. ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை அளிக்கும் அறிக்கைக்கு ஒப்புதல் அளிக்கும் நடைமுறை மட்டுமே அவருக்கு உள்ளது. ஊழல் தடுப்புத் துறை விசாரணை நடத்தி புகாருக்கு எதிர்மறையான அறிக்கையை அளித்த பிறகு, அதை ஆராயத் தேவையில்லை' என வாதிட்டார்.

ஆணையருக்கு அதிகாரம் உண்டு: அப்போது, ஊழல் தடுப்புத் துறை தரப்பில் ஆஜரான அரசு தலைமை குற்றவியல் வழக்குரைஞர் அசன் முகமது ஜின்னா, 'பொது ஊழியருக்கு எதிரான குற்றச்சாட்டுடன் புகார் வந்தால் அதை விசாரிக்க ஊழல் கண்காணிப்பு ஆணையருக்கு அதிகாரம் உள்ளது. ஊழல் தடுப்புத் துறை விசாரணையின் அறிக்கையை ஏற்கவும் நிராகரிக்கவும் ஊழல் கண்காணிப்பு ஆணையருக்கு அதிகாரம் உள்ளது.

எடப்பாடி பழனிசாமி மீதான குற்றச்சாட்டில் முகாந்திரம் இல்லை என கடந்த 2018-ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட ஆரம்பகட்ட விசாரணை அறிக்கையை ஊழல் தடுப்புத் துறை ஆணையர் ஏற்கவில்லை. மீண்டும் புதிதாக விசாரணை நடத்த அனுமதிக்கப்பட்டுள்ளது' என வாதிட்டார்.

ஆர்.எஸ்.பாரதி தரப்பில் ஆஜரான மூத்த வழக்குரைஞர் என்.ஆர்.இளங்கோ, 'விசாரணையில் ஏற்பட்ட முன்னேற்றம் காரணமாக வழக்கை திரும்பப் பெற அனுமதிக்க வேண்டும்' என்றார்.

அப்போது, எடப்பாடி பழனிசாமி தரப்பில், '2018-இல் நடத்தப்பட்ட ஆரம்பகட்ட விசாரணையின் முடிவில், மூடி முத்திரையிட்ட உறையில் தாக்கல் செய்த அறிக்கையை ஆய்வு செய்து உத்தரவு பிறப்பிக்க வேண்டும்' என்று வலியுறுத்தப்பட்டது.

அனைத்துத் தரப்பு வாதங்களும் நிறைவடைந்த நிலையில் வழக்கில் இடைக்கால உத்தரவு பிறப்பிப்பதாகக் கூறி வழக்கை நீதிபதி ஒத்திவைத்தார்.

ஊரக கண்டுபிடிப்பாளர் விருதுக்கு விண்ணப்பிக்கலாம்

சென்னை, ஜூலை 13: 2022-23 ஆண்டுக்கான 'ஊரகக் கண்டுபிடிப்பாளர் விருது'க்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

இது குறித்து தமிழ்நாடு அறிவியல் நகரம் சார்பில் வியாழக்கிழமை வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு:

அறிவியல் நகரம் 2018-19-ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசின் ஊரக கண்டுபிடிப்பாளர் விருதை வழங்கி வருகிறது.

இந்த விருது ஊரக மக்களின் அறிவுத் திறனை ஊக்குவித்து பல பயனுள்ள புதிய கண்டுபிடிப்புகளை வெளிக்கொணரும் விதத்தில் இரண்டு சிறந்த ஊரகக் கண்டுபிடிப்பாளர்களுக்கு தலா ரூ.1 லட்சத்துக்கான காசோலை மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டு வருகிறது.

2022-23 ஆம் ஆண்டுக்கான ஊரக கண்டுபிடிப்பாளர் விருதுக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பங்கள் மற்றும் விதிமுறைகள் www.sciencecitychennai.in என்ற அறிவியல் நகர இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் மாவட்ட ஆட்சியர்கள் மூலமாக அறிவியல் நகரத்துக்கு ஆகஸ்ட் 30-ஆம் தேதி மாலை 5.30 மணிக்குள் வந்து சேர வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கலைஞர் நூற்றாண்டு நூலகம் திறப்பு: முதல்வர் நாளை மதுரை பயணம்

சென்னை, ஜூலை 13: கலைஞர் நூற்றாண்டு நூலகத்தைத் திறந்து வைக்க முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்னையிலிருந்து சனிக்கிழமை (ஜூலை 15) காலை மதுரை செல்கிறார்.

சென்னையில் இருந்து விமானம் மூலம் மதுரை செல்லும் அவர், மாலையில் நடைபெறும் விழாவில் பங்கேற்கிறார். நூலகத்தைத் திறந்து வைத்து பார்வையிடுவதுடன், சிறப்புரை ஆற்றவுள்ளார். இதைத் தொடர்ந்து, இரவே மதுரையில் இருந்து சென்னை திரும்புகிறார்.

பெங்களூரு பயணம்: மதுரை பயணத்தை முடித்துக் கொண்டு, திங்கள்கிழமை (ஜூலை 17) அவர் பெங்களூரு செல்லவுள்ளார். அங்கு நடைபெறவுள்ள எதிர்க்கட்சிகள் கூட்டத்தில் திமுக சார்பில் அவர் பங்கேற்கிறார்.

விலைவாசி உயர்வு: ஜூலை 20-இல் அதிமுக ஆர்ப்பாட்டம்

சென்னை, ஜூலை 13: விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த வலியுறுத்தி, அதிமுக சார்பில் தமிழகம் முழுவதும் ஜூலை 20-ஆம் தேதி கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று அந்தக் கட்சியின் பொதுச் செயலர் எடப்பாடி கே பழனிசாமி அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வியாழக்கிழமை வெளியிட்ட அறிக்கை:

திமுக அரசு பொறுப்பேற்று 2 ஆண்டு காலத்தில் தமிழகத்தில் மக்கள் வாழ்வே கேள்விக்குறியாக உள்ளது.

மக்கள் அன்றாடம் சமையலுக்கு பயன்படுத்தும் தக்காளி, சின்ன வெங்காயம், இஞ்சி உள்ளிட்ட காய்கறிகளின் விலைகளும், துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, புளி, சீரகம் உள்ளிட்ட மளிகைப் பொருள்களின் விலையும் தற்போது கடுமையாக உயர்ந்துள்ளது.

மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களை நியாயவிலைக் கடைகள் மூலம் வழங்குவதாகக் கூறும் திமுக அரசு, அதை முறையாக செயல்படுத்தவில்லை. அதிமுக ஆட்சியில் இயற்கை இடர்பாடுகளால் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் உயர்ந்தபோது, அதற்கு ஏற்ற நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அண்டை மாநிலங்களில் இருந்து காய்கறி உள்ளிட்ட மளிகைப் பொருள்களைக் கொள்முதல் செய்து நியாயவிலைக் கடைகள் மற்றும் கூட்டுறவு பண்ணை கச்சாலைகள் மூலமாக மக்களின் தேவைகள் உடனுக்குடன் பூர்த்தி செய்யப்பட்டன. ஆனால், தற்போது அப்படி முறையாகச் செய்யப்படவில்லை.

திமுக ஆட்சிக்கு வந்த பிறகு, மின் கட்டணம், சொத்து வரி கட்டணம், பேருந்து கட்டணம், பத்திரப்பதிவு கட்டணம் போன்றவையும் உயர்த்தப்பட்டுள்ளன.

திமுக ஆட்சியில் பல்வேறு ஊழல்களும் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன.

இவற்றைக் கண்டித்தும் விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த வலியுறுத்தியும் அதிமுக சார்பில் தமிழகம் முழுவதும் மாவட்ட தலைநகரங்களில் உள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் முன்பு ஜூலை 20 காலை 10 மணிக்கு ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று அவர் கூறியுள்ளார்.

தமிழ்நாடு அரசு
ஆலங்காயம் சிறப்புநிலை பேரூராட்சி, திருப்பத்தூர் மாவட்டம்

ந.க.எண்.357/2023 ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு நாள்: 12.07.2023

திருப்பத்தூர் மாவட்டம், ஆலங்காயம் சிறப்புநிலை பேரூராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாடு திட்டம் 2022-2023-ன் கீழ் ரூ. 261.00 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்கண்ட தார்சாலை அமைக்கும் பணி செய்திட ஒப்பந்தப்புள்ளிகள் இரண்டு உறைகள் முறை மற்றும் மின்னணு ஒப்பந்த முறையில் வரவேற்கப்படுகின்றன.

வ. எண்.	பணியின் பெயர்	மதிப்பீடு தொகை ரூ.லட்சத்தில்
1.	வார்டு எண். 10 ராகவலு நாயுடு வட்டம் ரோடு மற்றும் வார்டு எண். 13 கொங்கியூர் ரோடு தார்சாலை அமைத்தல்.	126.00
2.	வார்டு எண். 3 மந்தை தெரு, வார்டு எண். 5 எம்.ஜி.ஆர் நகர் தருமராஜபுரம், வார்டு எண். 12, எம்.ஆர்.எஸ். நகர், வார்டு எண். 13 ராஜாபாளையம் தார்சாலை அமைத்தல்.	135.00
	மொத்தம்	261.00

1. ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை https://tntenders.gov.in மற்றும் http://townpanchayats.tn.gov.in/tender என்ற இணையதள முகவரிகளிலிருந்து இலவசமாக எடுத்துக்கொள்ளலாம். மேலும் ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த முழு விபரங்களும் பெறலாம்.
2. ஒப்பந்தப்புள்ளிகள் தொடர்பான நேரம் மற்றும் நாள்:
   அ) முன் கலந்தாய்வு கூட்டம் : 20.07.2023 காலை 11.00 மணி
   ஆ) ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல் : 27.07.2023 மாலை 3.00 மணி வரை
   இ) ஒப்பந்தப்புள்ளி திறத்தல் : 27.07.2023 மாலை 3.30 மணி
3. ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாளன்று அலுவலகத்திற்கு விடுமுறை தினமாக அறிவிக்கப்படின் அதற்கு அடுத்த வேலை நாளில் அதே நேரத்தில் அதே இடத்தில் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு திறக்கப்படும்.

செ.ம.தொ.இ/3657/ஒப்பந்தப்புள்ளி/2023
"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்."

செயல் அலுவலர்,
ஆலங்காயம் சிறப்புநிலை பேரூராட்சி,
திருப்பத்தூர் மாவட்டம்.

சேலம் மாநகராட்சி
2022-2023-ம் ஆண்டு 15வது மத்திய நிதிக்குழு மான்யம் (15th CFC)

ந.க.எண்.இ4/9094/2023 மின்னணு மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு நாள்: 13.07.2023

1. சேலம் மாநகராட்சியில் 15வது மத்திய நிதிக்குழு மான்யத்தின் கீழ் 7 பணிகளுக்கு தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்கள் வரவேற்கப்படுகிறது.
2. ஒவ்வொரு சிப்பத்திற்கும் மதிப்பீடு தொகை குறைந்த அளவு ரூ.10.00 இலட்சம் முதல் அதிகபட்ச மதிப்பீடு தொகை ரூ.95.00 இலட்சம்.
3. ஒப்பந்தப்புள்ளி தொடர்பான விபரங்கள் www.tn.tenders.gov.in தெரிந்து கொள்ளலாம்.
4. ஒப்பந்தப்புள்ளி விபரங்கள் www.tn.tenders.gov.in 14.07.2023 முதல் 01.08.2023ம் தேதி வரை இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
5. ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்க கடைசி நாள்: 01.08.2023
6. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை 01.08.2023ம் தேதி 3.30 பிற்பகல் திறக்கப்படும்.
7. ஒவ்வொரு பணிகளுக்கும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள முன் வைப்பு தொகை செலுத்துதல் வேண்டும்.
8. ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் மற்றும் விபரங்கள் https://tntenders.gov.in ஆகிய இணையதளத்திலல் இருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
   ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல்: 14.07.2023 முதல் 01.08.2023 மாலை 3.00 மணி வரை
   ஒப்பந்தப்புள்ளி திறப்பு: 01.08.2023 மாலை 3.30 மணி

ஆணையாளர், சேலம் மாநகராட்சி

செ.ம.தொ.இ / 3644 / ஒப்பந்தப்புள்ளி / 2023
சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்

தமிழ்நாடு அரசு
தக்கோலம் முதல்நிலை பேரூராட்சி
இராணிப்பேட்டை மாவட்டம்.

ந.க.எண்.173 /2023 ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு நாள்: 06.07.2023

தக்கோலம் முதல்நிலை பேரூராட்சியில் மாநில நிதிக்குழு (நகர்ப்புற சாலைகள் அபிவிருத்தி திட்டம்) SFC (Urban Road Development Fund) 2022-2023-ன் கீழ் ரூ.200.00 இலட்சம் மதிப்பீட்டில் தக்கோலம் பேரூராட்சி பகுதியில் சிமெண்ட் சாலைப்பணிகள் செய்திட ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டு உறைகள் முறை) வரவேற்கப்படுகின்றன.

1. ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை https://tntenders.gov.in என்ற இணையதள முகவரிகளிலிருந்து இலவசமாக எடுத்துக்கொள்ளலாம். மேலும் ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த முழு விபரங்களும் பெறலாம்.
2. ஒப்பந்தப்புள்ளிகள் தொடர்பான நேரம் மற்றும் நாள்:
   அ) முன் கலந்தாய்வு கூட்டம் : 24.07.2023 காலை 11.00 மணி
   ஆ) ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல் : 27.07.2023 மாலை 3.00 மணி வரை
   இ) ஒப்பந்தப்புள்ளி திறத்தல் : 27.07.2023 மாலை 3.30 மணி
3. ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாளன்று அலுவலகத்திற்கு விடுமுறை தினமாக அறிவிக்கப்படின் அதற்கு அடுத்த வேலை நாளில் அதே நேரத்தில் அதே இடத்தில் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு திறக்கப்படும்.

செ.ம.தொ.இ./3658/ஒப்பந்தப்புள்ளி/2023
"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்."

செயல் அலுவலர்
தக்கோலம் முதல்நிலை பேரூராட்சி
இராணிப்பேட்டை மாவட்டம்.

बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda

மண்டல அலுவலக ஒடுக்கப்பட்ட சொத்து மீட்பு கிளை,
சென்னை கிராமப்புற பிராந்தியம், எண்.123, இடை தளம்,
துகார் டவர்ஸ், R.L.சாலை, எழும்பூர், சென்னை - 600 008.
போன்:044- 2888 5428 E-mail:sarcmt@bankofbaroda.com

அசையா சொத்துக்களுக்கான விற்பனை அறிவிப்பு
"APPENDIX- IV-A [See proviso to Rule 6 (2) & 8 (6)]

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 மற்றும் உரிமை அமலாக்கச்சட்டம் 2002 விதி 6 (2) & 8 (6) சேர்த்து வாசிக்கவும் இதன் படி அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே குறிப்பிட்டுள்ள அசையா சொத்துக்களை மின்ஏலம் மூலம் விற்பனை செய்வதற்கான அறிவிப்பு.

இதன் மூலம் பொதுமக்களுக்கும், குறிப்பாக கடன்தாரர்கள், அடமானதாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்களுக்கும் கடன் கொடுத்த வங்கியானது கீழே விரிவாக குறிப்பிட்டுள்ள அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை பேங்க் ஆப் பரோடா வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் சுவாதீனத்தில் எடுத்துக் கொண்டுள்ளதை அடுத்து கீழே குறிப்பிட்டுள்ள செலுத்த வேண்டிய கடன் தொகையை வசூலிப்பதற்காக கீழே குறிப்பிட்டுள்ள அடமான சொத்துக்களை **"உள்ள இடத்தில் உள்ளவாறு" "உள்ளது உள்ளபடியே" மற்றும் "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே"** என்ற அடிப்படையில் விற்கப்படும் என்பதை இந்த அறிவிப்பு வழங்கப்படுகிறது. கடன்தாரர்கள்/ அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்கள் / கடனீட்டு சொத்துக்கள் / நிலுவை தொகை/ குறைந்த பட்ச விலை / மின் ஏலதேதி மற்றும் நேரம், முன்வைப்பு தொகை மற்றும் ஏல உயர்வு தொகை போன்றவைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்கள் பெயர் மற்றும் முகவரி : கடன்தாரரின் பெயர் : திரு.A.மோகன் குமார், புதிய எண்.30, பழைய எண்.07, சுப்பராய தெரு, ஓட்டேரி, சென்னை - 600 012. **மேலும் :** ப்ளாட் எண். F-2, மனை எண். 41, முதல் தளம், திரு.வி.க. பப்ளிக் சர்வெண்ட்ஸ் சொசைட்டி, சந்திரசேகரன் அவென்யூ, ஒக்கியம் துரைப்பாக்கம், சென்னை - 600 096. **மொத்த நிலுவை தொகை : 10.07.2023 அன்று வரை ரூ.76,52,978.91** மேலும் பின்வட்டி, பிற கட்டணங்கள் மற்றும் சட்ட செலவுகள் உட்பட.

தெரிந்தவரை ஏதேனும் வில்லங்கங்களுடன் கூடிய அசையா சொத்துக்களின் விவரங்கள் : சுவாதீன நிலை - அடையாளப்பூர்வ சுவாதீனம்: திரு.வி.க. பப்ளிக் சர்வெண்ட்ஸ் வெல்பேர் அண்டு ஹவுசிங் சைட் கோஆப்பரேடிவ் சொசைட்டி, பள்ளிகரனை கிராமம், சோழிங்கநல்லூர் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம் என்ற முகவரியில் பழைய சர்வே எண்.693, 693/2, மற்றும் பட்டா எண்.16799 -ன் படி மறுசர்வே எண்.693/23-ன் படி மனை எண்.41-ல் மொத்தம் உள்ள **2160 சதுர அடி** நிலத்தில் 560 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு நிலத்துடன் முதல் தளத்தில் பொது பகுதி உட்பட **1175 சதுர அடி** கட்டப்பட்டுள்ள அடுக்கு மாடி குடியிருப்பு எண்.F2. மேலும் அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும் மற்றும் எல்லைகள் : வடக்கில் : மனை எண்.40, தெற்கில்: மனை எண்.42, கிழக்கில் : மனை எண்.46 மற்றும் காலி நிலம், மேற்கில் : 24 அடி சாலை.
அட்சரேகை : N 12.930734, தீர்க்கரேகை : E 80.228713

குறைந்த பட்ச விலை : ரூ. 50,00,000/- முன் வைப்பு தொகை : ரூ. 5,00,000/- ஏல உயர்வு தொகை : ரூ. 10,000/-

மின் ஏலம் நடைபெறும் தேதி மற்றும் நேரம் :	01.08.2023 அன்று பிற்பகல் 02.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை
சொத்துக்களை பார்வையிடும் தேதி மற்றும் நேரம்	20.07.2023 அன்று மாலை 3.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை

விற்பனைக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் விவரங்களை https://www.bankofbaroda.in/e-auction.htm மற்றும் https://ibapi.in. என்ற இணையதளத்தை லிங்க் செய்து பார்க்கவும். மேலும் பங்கு கொள்ளும் ஏலதாரர்கள் அதிகாரப்பூர்வ அதிகாரி **திரு.விஜய், மேலாளர்,** தொலைபேசி எண். 044-2888 5428, 8940056367-ல் தொடர்பு கொள்ளலாம்.

விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இங்கு ஸ்கேன் செய்யவும்

தேதி : 14.07.2023
இடம் : சென்னை
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
பேங்க் ஆஃப் பரோடா

ADITYA BIRLA CAPITAL
PROTECTING INVESTING FINANCING ADVISING
ஆதித்ய பிர்லா ஃபைனான்ஸ் லிட்.

பதிவு அலுவலகம்: இந்தியன் ரேயான் காம்பௌண்டு, வேரவல், குஜராத் - 362266.
கிளை அலுவலகம்: அலகு #10 & 12, 5வது மற்றும் 4வது தளம்,
ஓவல் வெங்கட் நாராயண் சாலை, தி.நகர், சென்னை - 600 017.

"பிற்சேர்க்கை-IV-A"
[பார்க்க விதி 8(6)]
அசையா சொத்துகள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 மற்றும் அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(6) & விதி 9(1) ஆகியவற்றின் கீழ் அசையாச் சொத்து விற்பனைக்கான E-ஏல அறிவிப்பு. ஈடு பெற்றுக் கடனளித்த ஆதித்ய பிர்லா ஃபைனான்ஸ் லிமிடெட் நிறுவனத்தால் தாக்கல் செய்யப்பட்ட முதல் மேல்முறையீட்டு எண் 335/2022-இன் கீழான இடை நிலை விண்ணப்ப எண் 9864/2022-இன் பேரில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய 11.01.2023 நாளிட்ட உத்தரவுப்படி கீழே அட்டவணை 'A'இல் குறிப்பாக விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தினை விற்பனை செய்ய ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனம் அனுமதி பெற்றுள்ளது.

இதன் மூலம் பொதுமக்களுக்குப் பரவலாகவும் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்குக் குறிப்பாகவும் அறிவிப்பது யாதெனில் (i) M/s.நாதெள்ள சம்பத்துச் செட்டி அண்டு கோ., M/s. நாதெள்ள சுலோச்சனம்மா சாரிட்டபிள் டிரஸ்ட், M/s.நாதெள்ள சம்பத் ஜுவல்லரி பிரைவேட் லிட்., M/s.பரமார்த்த பூதானம் ஸ்ரீ நாதெள்ள சம்பத்துச் செட்டி சாரிட்டீஸ் (கடன்தாரர்கள்), (ii) திரு.நாதெள்ள ரங்கநாத குப்தா, திரு.நாதெள்ள பிரசன்ன குமார், திருமதி நாதெள்ள ராதிகா மற்றும் திருமதி நாதெள்ள லக்ஷ்மி பிரியா (ஜாமீன்தாரர்கள்) ஆகியோரிடமிருந்து ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்துக்கு வர வேண்டியுள்ளதும் கீழே (B) பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கடன் கணக்கு எண்களுக்கு எதிராக (E) பத்தியில் விவரிக்கப்பட்டுள்ளதும் 30.06.2023 நாள்படியானதுமான ரூ.81,77,76,492.74/- (ரூபாய் எண்பத்தோரு கோடியே எழுபத்தேழு லட்சத்து எழுபத்தாறாயிரத்து நானூற்று தொண்ணூற்று இரண்டு மற்றும் பைசா எழுபத்து நான்கு மட்டும்) தொகையை கீழே அட்டவணை 'B'இல் விவரித்துள்ளபடி நிலுவைத் தொகைகளைத் திரும்பப் பெறும் நாள் வரையிலான அதன் மேல் வட்டி மற்றும் இதர செலவுகளுடன் சேர்த்துத் திரும்பப் பெறும் பொருட்டு ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்திடம் அடமானம் வைக்கப்பட்டுள்ளதும் ஆதித்ய பிர்லா ஃபைனான்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலரால் நேரடி சுவாதீனம் செய்யப்பட்டுள்ளதுமான கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தானது "உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி", "உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்", "திரும்பப் பெறப்பட மாட்டாது" எனும் அடிப்படையில் 04.08.2023 அன்று விற்பனை செய்யப்பட உள்ளது.

இதன் குறைந்தபட்ச விலை ரூ.57,79,35,672/- (ரூபாய் ஐம்பத்தேழு கோடியே எழுபத்தொன்பது இலட்சத்து முப்பத்தைந்தாயிரத்து அறுநூற்று எழுபத்திரண்டு மட்டும்) மற்றும் டேவணித் தொகை (EMD) ரூ.5,77,93,567.02/- (ரூபாய் ஐந்து கோடியே எழுபத்தேழு இலட்சத்து தொண்ணூற்று மூன்றாயிரத்து ஐந்நூற்று அறுபத்தேழு மற்றும் பைசா இரண்டு மட்டும்).

அட்டவணை "A"
அசையாச் சொத்தின் விவரம்:

இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய 30950 சதுர அடி பரப்பளவு கொண்ட நிலம் மற்றும் அங்குள்ள கட்டடம். பழைய கதவு எண் 4, புதிய கதவு எண் 235, ஜவஹர்லால் நேரு சாலை (100 அடிச் சாலை), கோயம்பேடு, சென்னை – 600107, சர்வே எண் 49/3, 50/2B. அமைவிடம் – எண் 106 & 107, கோயம்பேடு கிராமம், எழும்பூர் நுங்கம்பாக்கம் வட்டம். இது மத்திய சென்னை பதிவு மாவட்டம் மற்றும் அண்ணாநகர் சார்பதிவு மாவட்டத்துக்கு உட்பட்டது. எல்லைகள் பின்வருமாறு: வடக்கு: காலி நிலம் மற்றும் கட்டடங்கள், தெற்கு: 100 அடிச் சாலை, கிழக்கு: டைல்ஸ் ஷோரூம், மேற்கு: மாருதி சுசுகி வொர்க் ஷாப் அனைத்தும் சேர்த்து பரப்பளவு 30,950 சதுர அடி. இது அண்ணாநகர் சார்பதிவு மாவட்டத்துக்கும், மத்திய சென்னை பதிவு மாவட்டத்துக்கும் உட்பட்டது.

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அறிய ஈடுபெற்று கடனளித்த நிறுவனத்தின் https://mortgagefinance.adityabirlacapital.com/Pages/Individual/Properties-for-Auction-under-SARFAESI-Act.aspx அல்லது https://sarfaesi.auctiontiger.net இணையத்தளத்தில் அளிக்கப்பட்டுள்ள இணைப்பைப் பாருங்கள்.

நாள்: 13.07.2023
இடம்: சென்னை
ஆதித்ய பிர்லா ஃபைனான்ஸ் லிமிடெட் சார்பில்
அதிகாரப்பூர்வ அலுவலர், (9710917596)
கடன் கணக்கு எண்கள்: 1. 0000080000389 & 2. 0162101

ADITYA BIRLA CAPITAL
PROTECTING INVESTING FINANCING ADVISING
ஆதித்ய பிர்லா ஃபைனான்ஸ் லிட்.

பதிவு அலுவலகம்: இந்தியன் ரேயான் காம்பௌண்டு, வேரவல், குஜராத் - 362266.
கிளை அலுவலகம்: அலகு #10 & 12, 6வது மற்றும் 4வது தளம்,
ஓவல் வெங்கட் நாராயண் சாலை, தி.நகர், சென்னை - 600 017.

"பிற்சேர்க்கை-IV-A"
[பார்க்க விதி 8(6)]
அசையா சொத்துகள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 மற்றும் அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(6) & விதி 9(1) ஆகியவற்றின் கீழ் அசையாச் சொத்து விற்பனைக்கான E-ஏல அறிவிப்பு. ஈடு பெற்றுக் கடனளித்த ஆதித்ய பிர்லா ஃபைனான்ஸ் லிமிடெட் நிறுவனத்தால் தாக்கல் செய்யப்பட்ட முதல் மேல்முறையீட்டு எண் 335/2022-இன் கீழான இடை நிலை விண்ணப்ப எண் 9864/2022-இன் பேரில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய 11.01.2023 நாளிட்ட உத்தரவுப்படி கீழே அட்டவணை 'A'இல் குறிப்பாக விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தினை விற்பனை செய்ய ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனம் அனுமதி பெற்றுள்ளது.

இதன் மூலம் பொதுமக்களுக்குப் பரவலாகவும் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்குக் குறிப்பாகவும் அறிவிப்பது யாதெனில் (i) M/s.நாதெள்ள சம்பத்துச் செட்டி அண்டு கோ., M/s. நாதெள்ள சுலோச்சனம்மா சாரிட்டபிள் டிரஸ்ட், M/s.நாதெள்ள சம்பத் ஜுவல்லரி பிரைவேட் லிட்., M/s.பரமார்த்த பூதானம் ஸ்ரீ நாதெள்ள சம்பத்துச் செட்டி சாரிட்டீஸ் (கடன்தாரர்கள்), (ii) திரு.நாதெள்ள ரங்கநாத குப்தா, திரு.நாதெள்ள பிரசன்ன குமார், திருமதி நாதெள்ள ராதிகா மற்றும் திருமதி நாதெள்ள லக்ஷ்மி பிரியா (ஜாமீன்தாரர்கள்) ஆகியோரிடமிருந்து ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்துக்கு வர வேண்டியுள்ளதும் கீழே (B) பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கடன் கணக்கு எண்களுக்கு எதிராக (E) பத்தியில் விவரிக்கப்பட்டுள்ளதும் 30.06.2023 நாள்படியானதுமான ரூ.81,77,76,492.74/- (ரூபாய் எண்பத்தோரு கோடியே எழுபத்தேழு லட்சத்து எழுபத்தாறாயிரத்து நானூற்று தொண்ணூற்று இரண்டு மற்றும் பைசா எழுபத்து நான்கு மட்டும்) தொகையை கீழே அட்டவணை 'B'இல் விவரித்துள்ளபடி நிலுவைத் தொகைகளைத் திரும்பப் பெறும் நாள் வரையிலான அதன் மேல் வட்டி மற்றும் இதர செலவுகளுடன் சேர்த்துத் திரும்பப் பெறும் பொருட்டு ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்திடம் அடமானம் வைக்கப்பட்டுள்ளதும் ஆதித்ய பிர்லா ஃபைனான்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலரால் நேரடி சுவாதீனம் செய்யப்பட்டுள்ளதுமான கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தானது "உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி", "உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்", "திரும்பப் பெறப்பட மாட்டாது" எனும் அடிப்படையில் 04.08.2023 அன்று விற்பனை செய்யப்பட உள்ளது.

இதன் குறைந்தபட்ச விலை ரூ.5,88,60,000/- (ரூபாய் ஐந்து கோடியே எண்பத்தெட்டு இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்) மற்றும் டேவணித் தொகை (EMD) ரூ.58,86,000/- (ரூபாய் ஐம்பத்தெட்டு இலட்சத்து எண்பத்தாறாயிரம் மட்டும்).

அட்டவணை "A"
அசையாச் சொத்தின் விவரம்:

இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய நிலம். பள்ளி மனை இடத்தின் பரப்பளவு 1 ஏக்கர் 8 சென்ட் (43.5 ஏர்) அல்லது 47,088 சதுர அடி. LPDM/DTCP மனை 31/70, 3/71 & 4/71-இன்கீழ் ஒப்புதல்பெற்ற லேஅவுட்டில் அமைந்துள்ளது. சர்வே எண் 255/1, பட்டா எண் 1539-இன்படி புதிய சர்வே எண் 255/37. அமைவிடம் - எண் 111, வரதராஜபுரம் கிராமம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம். காஞ்சிபுரம் மாவட்டம். எல்லைகள் பின்வருமாறு: வடக்கு: 30 அடிச் சாலை (தாசில்தார் சுப்ரமணியம் சாலை), தெற்கு: 30 அடிச் சாலை (துணை மாவட்ட ஆட்சியர் செல்லய்யா சாலை), கிழக்கு: 30 அடிச் சாலை (T. சீனிவாசன் I.A.S. சாலை), மேற்கு: மனை எண்கள் 1555, 1563, 23 அடிச் சாலை, மனை எண்கள் 1454, 1570. இந்தச் சொத்து படப்பை சார்பதிவு மாவட்டம், வரதராஜபுரம் ஊராட்சி எல்லைகள் மற்றும் குன்றத்தூர் படப்பை ஊராட்சி ஒன்றிய எல்லைகளுக்கு உட்பட்டது.

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அறிய ஈடுபெற்று கடனளித்த நிறுவனத்தின் https://mortgagefinance.adityabirlacapital.com/Pages/Individual/Properties-for-Auction-under-SARFAESI-Act.aspx அல்லது https://sarfaesi.auctiontiger.net இணையத்தளத்தில் அளிக்கப்பட்டுள்ள இணைப்பைப் பாருங்கள்.

நாள்: 13.07.2023
இடம்: சென்னை
ஆதித்ய பிர்லா ஃபைனான்ஸ் லிமிடெட் சார்பில்
அதிகாரப்பூர்வ அலுவலர், (9710917596)
கடன் கணக்கு எண்கள்: 1. 0000080000389 & 2. 0162101

Dalmia
Bharat Sugar

டால்மியா பாரத் சுகர் அண்டு இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்
(CIN: L15100TN1951PLC000640)
பதிவு அலுவலகம்: டால்மியாபுரம், மாவட்டம்-திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு-621651, இந்தியா.
தொலைபேசி எண். 011 23465100, தொலைநகல்: 011 23313303
மின்னஞ்சல்: sec.corp@dalmiasugar.com
இணையத்தளம்: www.dalmiasugar.com

71ஆவது ஆண்டு பொதுக்குழுக் கூட்டம் தொடர்பான அறிவிப்பு

இதன் மூலம் பங்குதாரர்களுக்குத் தெரிவிப்பது யாதெனில், நமது நிறுவனத்தின் 71ஆவது ஆண்டு பொதுக்குழுக் கூட்டம் ("பொதுக்கூட்டம்") நிறுவனச் சட்டம் 2013 மற்றும் அதன் கீழான விதிகளின்படியும் ("மேற்கூறிய சட்டம்") அத்துடன் பெருநிறுவன விவகாரங்கள்துறை அமைச்சகத்தின் மே 5, 2020 மற்றும் டிசம்பர் 28, 2022 நாளிட்ட பொதுச் சுற்றறிக்கை எண்கள் முறையே 20/2020 மற்றும் 10/2022 ("MCA சுற்றறிக்கைகள்") ஆகியவற்றுடன் இதர உரிய சுற்றறிக்கைகளின்படியும் ஆகஸ்டு 11, 2023 – வெள்ளிக்கிழமை அன்று இந்திய நேரப்படி முற்பகல் 11:00 மணிக்குப் பொது இடத்தில் உறுப்பினர்கள் நேரில் வந்து கலந்து கொள்ளாத வகையில் காணொளிக் கலந்துரையாடல் (Video Conferencing) / இதர ஒளி-ஒலி ஊடக வாயிலாக நடைபெற உள்ளது.

பொதுக்கூட்டம் குறித்த அறிவிப்பும் ஆண்டறிக்கையும் நிறுவனத்தின் இணையத்தளமான www.dalmiasugar.com, நிறுவனத்தின் பங்குகள் பட்டியலிடப்படும் BSE லிமிடெட் மற்றும் இந்திய தேசியப் பங்குச் சந்தை ஆகியவற்றின் இணையத்தளங்களான முறையே www.bseindia.com மற்றும் www.nseindia.com ஆகியவற்றிலும் NSDL-இன் www.evoting.nsdl.com இணையத்தளத்திலும் கிடைக்கும்.

நமது நிறுவனம் நேஷனல் செக்கியூரிட்டீஸ் டெபாசிட்டரி லிமிடெட் ("NSDL") மூலம் பங்குதாரர்களுக்குத் தொலைநிலை மின்னணு வாக்குப்பதிவு (Remote e-voting) வசதியை வழங்குகிறது. இந்த வாக்குப்பதிவு நேரம் ஆகஸ்டு 08, 2023 – செவ்வாய்க்கிழமை அன்று காலை 9:00 மணிக்குத் தொடங்கி ஆகஸ்டு 10, 2023 – வியாழக்கிழமை அன்று மாலை 5:00 மணிக்கு முடிவடைகிறது. ஆகஸ்டு 04, 2023 – வெள்ளிக்கிழமை அன்று - அதாவது கெடு நாள்படி - அச்சு வடிவிலோ தாளில்லா (dematerialized) வடிவிலோ பங்குகளை வைத்திருக்கக்கூடிய பங்குதாரர்கள் இந்தக் காலக்கட்டத்தில் தங்கள் வாக்கினை மின்னணு வாயிலாகச் செலுத்தலாம். தொலைநிலை மின்னணு வாக்குப்பதிவு முறையில் வாக்களிக்க இயலாத பங்குதாரர்கள் தங்கள் பயனர் விவரங்களைப் (credentials) பயன்படுத்தி ஆண்டுப் பொதுக் குழுக் கூட்டத்தின்பொழுது மின்னணு வாக்குச் செலுத்தலாம். இதற்கான பயனர் விவரங்கள் பொதுக்கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளன. தொலைநிலை மின்னணு வாக்குப்பதிவு / பொதுக்கூட்டத்தின்பொழுது செலுத்தக்கூடிய மின்னணு வாக்குப்பதிவு நடைமுறைகள் குறித்த விரிவான விவரங்கள் பொதுக்கூட்ட அறிவிப்பில் வழங்கப்பட்டுள்ளன.

மார்ச் 31, 2023 அன்றுடன் முடிவடைந்த நிதியாண்டுக்கான இறுதி ஈவுத்தொகை ஒரு பங்குக்கு ரூ.1.00 (50%) என்று மே 19, 2023 அன்று நடந்த நிறுவனக் குழு இயக்குநர்கள் கூட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது என்பதைப் பங்குதாரர்கள் கவனத்தில் கொள்ள வேண்டுகிறோம். இந்த இறுதி ஈவுத்தொகைக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டால் ஆகஸ்டு 04, 2023 – வெள்ளிக்கிழமை நாள்படி உறுப்பினர் பதிவேட்டில் இடம்பெற்றுள்ள உறுப்பினர்களுக்கு அத்தொகை வழங்கப்படும்.

இதுவரை தங்கள் மின்னஞ்சல் முகவரிகளைப் பதிவு செய்யாத பங்குதாரர்கள் sec.corp@dalmiasugar.com / evoting@nsdl.co.in எனும் மின்னஞ்சல் முகவரிக்குக் கோரிக்கை அனுப்பி நிறுவனத்திடம் / நேஷனல் செக்கியூரிட்டீஸ் டெபாசிட்டரி லிமிடெடிடம் தற்காலிகமாகத் தங்கள் மின்னஞ்சல் முகவரியையும் கைப்பேசி எண்ணையும் பதிவு செய்து கொள்ளலாம். பங்குதாரர்களில் தங்கள் மின்னஞ்சல் முகவரியையும் கைப்பேசி எண்ணையும் முகவரி மற்றும் வங்கி விவரங்கள் ஆகியவற்றுடன் பதிவு செய்தவர்கள், செய்யாதவர்கள் ஆகிய இரு தரப்பினரும் தயவு செய்து தொடர்பு கொண்டு தங்கள் விவரங்களைச் சரிபார்த்துக் கொள்வதோடு / பதிவு செய்து கொள்வதோடு தங்கள் ஈவுத் தொகையை நேரிடையாக வங்கிக் கணக்கில் பெறுவதற்குத் தங்கள் பங்குகள் மின்னணு வடிவிலானதாக இருப்பின் முதலீட்டு முகவரிடமும் (Depository Participant) பங்குகள் அச்சு வடிவிலானதாக இருப்பின் நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் பங்குப் பரிமாற்ற முகவரான K-ஃபின்டெக் டெக்னாலஜிஸ் லிமிடெடிமும் தேவையான விவரங்களைத் தாக்கல் செய்ய வேண்டும். இது குறித்து ஏதேனும் கேள்விகள் இருப்பின் பங்குதாரர்கள் einward.ris@kfintech.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு எழுதலாம்.

தனிப்பட்ட தாளில்லாக் கணக்குதாரர்கள் (individual demat account holders) அனைவரும் ஒற்றைப் புகுபதிகை விவரத்தைப் (single login credential) பயன்படுத்தித் தங்கள் தாளில்லாக் கணக்குகள் மூலமோ முதலீட்டாளர்களின் / முதலீட்டு முகவர்களின் இணையத்தளங்கள் மூலமோ மின்னணு வாக்குச் செலுத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனால் தனிப்பட்ட தாளில்லாக் கணக்குதாரர்கள் NSDL-இடம் மீண்டும் பதிவு செய்து கொள்ள வேண்டிய தேவையின்றித் தங்கள் வாக்கினைச் செலுத்தலாம்.

அச்சு வடிவில் பங்குகளை வைத்திருப்பவர்களும் பொதுக்கூட்ட அறிவிப்பு அனுப்பப்பட்ட பிறகு நிறுவனத்தின் பங்குகளை வாங்கிப் பங்குதாரராகியிருக்கக் கூடியவர்களுமான தனிப்பட்டவரல்லாத (non-individual) பங்குதாரர்கள் கெடுநாள்படி பங்குகளைக் கைவசம் வைத்திருந்தால் evoting@nsdl.co.in எனும் மின்னஞ்சல் முகவரியில் தொடர்பு கொண்டு பயனர் பெயரும் கடவுச் சொல்லும் பெற்றுக் கொள்ளலாம். ஒருவேளை அவர்கள் ஏற்கெனவே தொலைநிலை மின்னணு வாக்குப்பதிவுக்காக NSDL-இடம் பதிவு செய்து கொண்டிருந்தால் அந்தப் பயனர் பெயரையும் கடவுச்சொல்லையும் பயன்படுத்தியே அவர்கள் தங்கள் வாக்கினைச் செலுத்தலாம்.

டால்மியா பாரத் சுகர் அண்டு இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் சார்பில்,
ஒம்/-
ஆஷிமா V கன்னா
நிறுவனச் செயலர்
உறுப்பினர் எண்: ACS34517

இடம்: புது தில்லி
நாள்: ஜூலை 13, 2023